பக்கங்கள் 14 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சீரற்ற காலநிலையால் 40 ஆயிரம் பேர் பாதிப்பு

இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலையால் நால்வர் பலியாகியுள்ளனர். மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

18 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற கால நிலையால் 8 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பேர் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 10 வியாழக்கிழமை 23.05.2024 அதிர்வு 297



வடமராட்சி பொறியியலாளர் ஒருவரின் குடும்பம் பயணித்த கார்



# திருமலையில் கோர விபத்து! 6 வயது சிறுமி பரிதாபச் சாவு!!

## 4 வயது சிறுவன் படுகாயம்; அதிகாலை பெருந்துயரம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம், வடமராட்சியைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவரின் குடும்பம் பயணித்த கார், திருகோணமலையில் விபத்துக்குள்ளானதில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். அந்தச் சிறுமியின் சகோதரனான 4 வயதுடைய சிறுவன் படுகாயமடைந்துள்ளார். 04▶



# மாயமான 12 வயது மாணவன் பிக்குவானார்! கதிர்காமம் விகாரையொன்றில் கண்டுபிடிப்பு!!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், மதுரங்குளி பகுதியில் இருந்து கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து காணாமல்போன 12 வயது மாணவன் கதிர்காமம் விகாரையொன்றில் தங்கிருந்த நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்று மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி முன்மாதிரி பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்கும் நெதுசர பிரியனந்த எனும் மாணவன் கடந்த 18ஆம் திகதி முதல் காணாமல்போயிருந்தார்.

மேற்படி மாணவனின் தாய் தொழில் நிமித்தம் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில், மாணவன் பாட்டி வீட்டில் வசித்து வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் தனது பாட்டியோடு முரண்பட்ட நிலையில், 18ஆம் திகதி யாருக்கும் சொல்லாமல் வீட்டில் இருந்து வெளியேறிய மாணவன் வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் மதுரங்குளி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த மாணவன் புத்தளம் – மதுரங்குளியில் இருந்து கொழும்புக்குச் சென்றுள்ளார் என்றும், அதன் பின்னர் 04▶






# மன்னாரில் தனியார் காணிகள் சட்டவிரோதமாகச் சுவீகரிப்பு!

**ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுடன் சந்திப்பு**

(மன்னார்)

மன்னார் தீவக பகுதிக்குள் தனியாருக்கு சொந்தமான காணிகளைத் தொடர்ச்சியாக சில காணி இடைத்தரகர்கள் ஊடாக சில தனியார் நிறுவனங்கள் சட்ட விரோதமாகச் சுவீகரிக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கும் முகமாக மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் ஜனாதிபதி சட்டத்தரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் பாதிக்கப்பட்ட தனியார் காணி உரிமையாளர்கள் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இன்று வியாழக்கிழமை (23) மன்னார் மெசிடோ அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் நடுக்குடா, கொன்னையன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் பாரம்பரியமாக தாங்கள் வசித்துவரும் காணிகளை தனியார் நிறுவனங்கள் தொடர்ச்சியாக அடாத்தாக வேலிகள் அடைத்து கையகப்படுத்துகின்றன என்றும் இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்தாலும் பொலிஸார் நடவடிக்கை எடுப்பது இல்லை என்றும் தனியார் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் தனி காணி ஒன்றைக் கொள்வனவு செய்யும் சில நிறுவனங்கள் அந்த காணிகள் மாத்திரம் இன்றி அதைச் சூழ உள்ள காணிகளையும் சுவீகரிக்கின்றன என்றும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்த நிலையில் இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தனியார் காணி உரிமையாளர்களுக்கு சட்டத்தரணி சுமந்திரனால் தெளிவுபடுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் தயாரிப்பது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

அதே நேரம் இம்மாதம் இவ்வாறு சட்ட விரோதமாக காணி சுவீ கரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனததுக்கு எதிராக முதல் கட்டமாக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இவ்வாறு தனியாருக்கு சொந்தமான காணிகள் தனி நபர்களாலும் சில நிறுவனங்களாலும் அபகரிக்கப்பட்டு கனிய மணல் அகழ்வுக்கு வழங்குவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# காற்றாலை உற்பத்தி, கனிய மண் அகழ்வு மன்னாரில் பொருத்தமானதாக இல்லை!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு; நீதிமன்றத்தை நாட நடவடிக்கை!!

(மன்னார் நிருபர், வாஸ் கூஞ்ஞ)

காற்றாலை மின்சாரம் அமைக்கலாம். ஆனால் அதற்கான உகந்த இடங்களை தெரிவு செய்து முன்னெடுக்க வேண்டும்.ஆனால் மன்னார் தீவு என்பது கடல் மட்டத்தில் இருந்து சற்று குறைவான இடத்தில் காணப்படுகின்றது. இந்தத் தீவு இந்தச் செயற்றிட்டத்துக்குப் பொருத்தமானதாக இல்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் இன்று வியாழக்கிழமை (23) காலை மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பான சட்ட ரீதியாக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளை ஒன்றிணைத்து கலந்துரையாடும் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழு, மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்துத் தெரிவிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் இன்று வியாழக்கிழமை(23) பொது அமைப்புக்களை




ஒன்றிணைத்து விசேட சந்திப்பை மேற்கொண்டோம். மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட அமைப்புக்களை இவ்வாறு சந்தித்து மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினோம்.

மன்னாரில் இரண்டு பாரிய அச்சுறுத்தல்களை மக்கள் எதிர் கொள்ளுகிறார்கள். காற்றாலை அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் செயல் திட்டம். அதில் மூன்று திட்டங்கள் உள்ளதாக கூறப்படுகிறது.

ஒரு திட்டத்தின் அடிப்படையில் காற்றாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மற்றைய இரு திட்டங்களும் உடனடியாக செயல் படுத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளதை அடிப்படையாக வைத்து காற்றாலை அமைக்கின்றது. இதன் மூலம் இந்தப் பிரதேசங்களில் ஏற்படும் பல விதமான பாதிப்புக்களை மக்கள் ஏற்கனவே நேரடியாக அனுபவிக்கின்றார்கள்.

குறிப்பாக மீன்பிடி சமூகம் இதன் விளைவாக வழமையாக அவர்கள் பிடிக்கும் மீன்களின் தொகைகளில் மாற்றம் காணப்பட்டு குறைகின்றமை மற்றும் நீரோட்டங்களின் திசைகள் வழமை போல் இல்லாது மாற்றமடைவதும் உள்ளடங்களாக பல்வேறு காரணிகளால் பிடிக்கப்படுகிற மீன்களின் தொகை பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

குறிப்பாக கரைவலை மீன்பிடி சம்பந்தமான முறையில் பாரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதை வைத்தும்,வேறு பல விடயங்களை வைத்தும் காற்றாலையை மன்னார் தீவுடன் சேர்ந்து அமைப்பது மன்னார் தீவுக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது.

எனவே இந்தத் திட்டங்களை நிறுத்துவதற்கும், ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டத்தில் ஏற்பட்டுள்ள பின் விளைவுகள் மற்றும் பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் வகையில் சில மாற்று வழிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த விடையங்களை உடனடியாக கவனத்தில் எடுப்போம். இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒன்று நீதிமன்றத்தை நாடியுள்ளது.

இதனடிப்படையில் மன்னாரில் இருந்து மக்கள் சார்பாகவும் இவ்வாறான ஒரு செயல் திட்டத்தை அவர்களுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்வரும் வாரம் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்.- என்றார்.

# கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் மாயம்



(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் சல்லி கடல் பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரைக் காணவில்லை என மீனவர்களின் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 20ஆம் திகதி சல்லி பிரதேசத்தில் இருந்து காலை 10 மணியளவில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் மாயமாகியுள்ளனர்.

சல்லி பிரதேசத்தின் 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குட்டிராசா சசிக்குமார் (வயது 45), முருகையா சுஜந்தன் (வயது 22) என்பவர்களே காணாமல்போயுள்ளனர்.

இவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இன்று வரை கிடைக்கவில்லை என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மீனவர்களைக் கடலில் தேடும் நடவடிக்கையில் சல்லி பிரதேச மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் கடற்படைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் மீனவர்களின் உறவினர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





**திருமலையில்...**

திருகோணமலை – ஈச்சிலம்பற்று, வட்டவன் பகுதியில் இன்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தக் கோர இடம்பெற்றுள்ளது என்று ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி – அல்வாய் மேற்கு, திக்கம் பகுதியைச் சேர்ந்த டயலொக் நிறுவனத்தின் வடக்கு – கிழக்கு பிராந்தியப் பொறியியலாளர் சிவயோகநாதன் நிதர்சன் (வயது 35), அவரது மனைவியான வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் நிதர்சன் தர்சினி (வயது 35) ஆகிய இருவரும் தமது இரண்டு பிள்ளைகளுடன் காரில் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வேளை, திருகோணமலை – ஈச்சிலம்பற்று, வட்டவன் பகுதியில் கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து – வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தக் கோர விபத்தில் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் தரம் 1 இல் கல்வி பயிலும் மாணவியான நிதர்சன் அதிதி (வயது 6) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது சகோதரனான நிதர்சன் அதிரேஷ் (வயது 4) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து இடம்பெற்றபோது சிறுமியும், சிறுவனும் காரின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்துள்ளனர்.

அதேவேளை, காரைச் செலுத்திச் சென்ற தந்தையும், முன் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்த தாயும் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஈச்சிலம்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னடுத்துள்ளனர்.

---

**மாயமான...**

அந்த மாணவனின் விருப்பத்தின்படி கதிர்காமம், 20 ஏக்கர் – டோசர்வெவ கௌதம சதகம் அரன விகாரையில் ஒப்படைக்கப்பட்டார் என விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பௌத்த விகாரையில் ஒப்படைக்கப்பட்ட மேற்படி மாணவன் அவரது விருப்பத்துக்கிணங்க கடந்த 20 ஆம் திகதி "மதுரங்குளி சுபோதி" எனும் பெயரில் பௌத்த பிக்குவாக துறவறம் பூண்டுள்ளார் எனக் கௌதம சதகம் அரன விகாரையின் விகாராதிபதி கலன்பிந்துனுவெவ அனுருத்த மைத்திரி தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காணாமல்போனார் எனத் தெரிவிக்கப்பட்ட அந்த மாணவன், கதிர்காமம், கௌதம சதகம் அரன விகாரையில் இருக்கின்றார் என மதுரங்குளி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றும், அந்த மாணவனை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், பௌத்த துறவியாகுவதே தனது விருப்பம் என்றும், தான் விகாரையை விட்டு வேறு எங்கும் செல்லப்போவதில்லை என "மதுரங்குளி சுபோதி" எனும் பெயரில் பௌத்த பிக்குவாக துறவறம் பூண்டுள்ள அந்த மாணவன் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

---

**சீரற்ற காலநிலையால்...**

பாதிக்கப்பட்டுள்ளனர்.

3 வீடுகள் முழுமையாகவும் 973 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் புத்தளம் மாவட்டத்திலேயே பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளது.





# மன்னார் வங்காலை கிராமத்தில் கடல் அரிப்பால் அபாய நிலைமை!

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்தில் தென் கடலுக்கு அருகாமையில் காணப்படும் வங்காலை கிராமத்துக்குள் கடல்நீர் உட் புகுந்து வருகிறது. இதனால் அபாய நிலைமை தோன்றியுள்ளது.

தங்கள் படகுகளையும் கடலோரத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன் வாடிகளிலுள்ள கடல் உபகரணங்களை பாதுகாப்பான இடங்களில் வைக்கும்படி மீனவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்காலை கிராமத்தை அண்டிய தென் கடல் திடீரென வங்காலை கடற்தொழிலாளர்களின் முக்கிய பிரதான பாதையை மேவி கிராமம் நோக்கி கடல்நீர் பரவத் தொடங்கியுள்ளது.

துற்பொழுது உள்ள காலநிலை தொடருமானால் இந்தப் பகுதியில் பெரும் ஆபத்து ஏற்படும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடல்நீர் கிராமத்துக்குள் உட்புகாது இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மக்களால் நீண்ட காலமாக சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இன்றைய கடல் அரிப்பை அரசியல் வாதிகள் மற்றும் இதன் தொடர்பான அதிகாரிகளும் நேரடியாக பார்வையிட் டுள்ளனர்.

மீன்பிடி படகுகள் உட்பட அனைத்து மீன்பிடி உபகரணங்களையும் கடற்கரையில் இருந்து அகற்றுங்கள். இன்று (22) முதல் மறு அறிவித்தல் வரை பணிக்கு செல்ல அனுமதிக்கப்படாது என கடற்றொழில் மற்றும் நீரியல் வளதிணைக்களம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாள்களில் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பலத்த மழை மற்றும் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வெசாக் சிந்தனை

இன்று வெசாக் கொண்டாட்ட தினம்.

இந்த முழுமதி நாள் பௌத்தர்களைப் பொறுத்தவரை மிக முக்கிய அனுஷ்டான தினம்.

இத்தினத்தை இந்தியாவில் புத்த பூர்ணிமா என்பர். இலங்கையில் வெசாக் அல்லது வைசாகம் அல்லது விசாகம் என்பர்.

மே மாத பௌர்ணமி (முழு நிலா) நாள்உலகில் உள்ள அனைத்து பௌத்தர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும்.

பலவித சமய நிகழ்வுகள் இந்நாளில் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை முன்னிறுத்தி இடம்பெறும். இக்காலப் பகுதியில. பௌத்தர்கள் வாழும் பகுதிகளில் பந்தல்கள், தோரணங்கள், ஒளிக்கூடுகள் கட்டப்பட்டு எங்கும் விழாக்கோலமாக இருக்கும்.

இந்தநாள்மூன்று முக்கியத்துவங்களை கொண்ட நாளாக பௌத்தர்களால் கொண்டாடப்படுகின்றது.

சித்தார்த்த கௌதமர் இன்றைய நேபாளத்தின் லும்பினி என்னுமிடத்தில் பிறந்ததும் -

புத்தகயா எனும் இடத்தில் தவம் புரிந்து புத்த நிலையை அடைந்ததும் -

இந்தியாவின் குசி நகரில் பரிநிர்வாணம் அடைந்ததும் -

மே மாத பூரணை நாள்களிலேயே நிகழ்ந்தன என பௌத்தர்கள் நம்புகின்றனர்.

அதனால், பௌத்தத்தை முன்னிலை கொடுத்துப் பேணிப் பாதுகாத்து ஓம்புவது தலையாய கடமை என்று அரசமைப்பின் பிரதான அத்தியாயங்கள் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ள இலங்கையில் இத்தினம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

கௌதம புத்தரின் வழிகாட்டுதலில் உருவான பௌத்த மார்க்கத்தை - பௌத்த சீலத்தை - முழு அளவில் கடைப்பிடிப்பதாகக் கூறும் இலங்கையில் புத்தரின் உயர்வான சிந்தனைகள் உரிய முறையில் பேணப்படுகின்றனவா - பின்பற்றப்படுகின்றனவா - என்று நோக்குவது இந்தத் தினத்துக்குச் சற்று பொருத்தமானதுதான்.

புத்தரின் போதனைகளில் உருவான பௌத்த சீலத்தை 'தசீலம்' என்றும் கூறுவர்.

இல்லறத்தார் - சாமானியர்கள் - கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து சீலங்களையும், பௌத்த பிக்குகள், பிக்குனிகள் கடைபிடிக்க வேண்டிய ஐந்து சீலங்களையும் கூறுவதால் இது 'பஞ்சசீலம்' என்றும் உரைக்கப்படுகிறது.

✦ ஓர் உயிரையும் கொல்லாமலும், தீங்கு செய்யாமலும் இருத்தல்.

✦ பிறர் பொருளைக் களவாடாது இருத்தல்.

ழ முறை தவறிய சிற்றின்பத்தை நீக்குதல்.

✦ மது வகைகளை உண்ணாது இருத்தல்.

✦ பொய் பேசாது இருத்தல்.

- இவையே இல்லறத்தார்க்கு - சாமன்ய பொதுமக்களுக்கு - புத்தர் தந்த போதனைகள். இவைதான் பஞ்சசீலம்.

மேற்படி ஐந்தோடு -

✦ உண்ணத் தகாத வேளையில் உணவு கொள்ளாமை.

✦ இசை, ஆடல், பாடல்களைக் கேட்பது, பார்ப்பது போன்றவற்றைத் தவிர்த்தல்.

✦ மலர், வாசனை திரவியங்கள் முதலியவற்றை உபயோகிக்காதிருத்தல்.

✦ பொன், வெள்ளி முதலியவற்றை உபயோகிக்காதிருத்தல்.

✦ உயரமான, அகலமான படுக்கை முதலிய சுக ஆசனங்களைத் தவிர்த்தல்.

- போன்றவை பிக்குகள், பிக்குனிகளின் கடமை என்கின்றது தச சீலம்.

கௌதம புத்தரின் உயர்ந்த போதனைகளைப் பின்பற்றுவோர் தாங்கள் என்று கூறிக் கொள்வோர், இவற்றின்படி தாங்கள் ஒழுகுகின்றார்களா என்பதை இன்றைய வெசாக் தினத்தில் தமது சிந்தனையில் நிறுத்தி ஆராய்வார்கள் எனில், இந்த நாட்டின் தேசிய பிரச்சினை உட்பட பல நெருக்குவாரங்கள் அடியோடு நீங்கிவிடும் என்பது உறுதி.




# உடையார்கட்டு மாணவிகள் இருவருக்குச் சைக்கிள்கள்!

முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் இரண்டு மாணவிகளுக்கு தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மிக நீண்டதூரத்தில் இருந்து பாடசாலைக்கு நடந்து சென்று வருவதால் அதனை அவதானித்த பாடசாலை நிர்வாகம் அந்த மாணவிகளுக்குச் சைக்கிள்கள் வழங்குமாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கு அமைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று முன்தினம் (21) சைக்கிள்கள் மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சைக்கிள்களையும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகன் சுவாமிகள், கிளிநொச்சி சின்மியா மிஷன் சுவாமிகள் தமது தொண்டர்களுடன் சென்று வழங்கிவைத்தார்.

# கல்முனை நகர் ஒரு வழிப் பாதை இரு வழிப் பாதையாகத் திறப்பு!

(சர்ஜூன் லாபீர்)

கல்முனை நகர் வர்த்தகர்கள் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கலமுனை நகர் பகுதியில் உள்ள ஒரு வழிப் பாதை இரு வழிப் பாதையாக இன்று (23) உத்தியோக பூர்வமாகத் திறக்கப்பட்டது.

இந்த உத்தியோக பூர்வ நிகழ்வு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர், தலைமையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திக நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம பிரதம அதிதியாக கலந்து கொண்டு இரு வழிப்பாதையை திறந்து வைத்தார்.



இன்று முதல் இந்த ஒரு வழிப் பாதை (டமாஸ் ஜுவலரி சந்தியில் இருந்து கொமர்சியல் வங்கி வரையான ஒரு வழிப்பாதை) இரு வழியாக மாற்றப்பட்டு பொதுப் போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபை பிரதி ஆணையாளர் ஏ.எச்.அசீம், கல்முனை மாநகர பொறியியலாளர் ஜௌஸி அப்துல் ஜப்பார், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ.பாவா, நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமைத்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன

(ரஸீன் ரஸ்மின்)

ஐக்கிய காங்கிரஸ் கட்சி மற்றும் உதவும் கரங்கள் அமைப்பு என்பனவற்றின் ஏற்பாட்டில் கற்பிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முதலைப்பாளி கிராம சேவகர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேற்று (22) இரவு சமைத்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கற்பிட்டி, முதலைப்பாளி கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட மதீனாபுரம் மற்றும் கண்டல்குடா வீட்டுத்திட்டம் ஆகிய பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இவ்வாறு இரவு நேரத்துக்கான சமைத்த உணவு வழங்கப்பட்டது.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும், உயர்பீட உறுப்பினருமான சப்வான் சல்மான், புத்தளம் தொகுதி அமைப்பாளர் எப். எம். றாபி, கற்பிட்டி பிரதேச அமைப்பாளர் கே.பி.ரபீக் மற்றும் உதவும் கரங்கள் அமைப்பின் பணிப்பாளர் எம்.என்.எம். றினோஸ் ஆகியோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான சமைத்த உணவுகளை மதீனாபுரம் அப்துல்லாஹ் அல்-சப்ரான் மஸ்ஜித் நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

இதன்போது, முதலைப்பாளி கிராம சேவகர் பிரிவில் உள்ள மதீனாபுரம் மற்றும் கண்டகுடா வீட்டுத்திட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 80 குடும்பங்களைச் சேர்ந்த 370 பேருக்கு இரவு நேரத்துக்கான சமைத்த உணவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மதீனாபுரம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட ஐக்கிய காங்கிரஸ் கட்சி மற்றும் உதவும் கரங்கள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் சென்று அவர்களின் நிலமைகளையும் கேட்டறிந்தனர்.

இதேவேளை, பாலாவி – முல்லை ஸ்கீம் கிராமத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 85 குடும்பங்களை சேர்ந்த 130 பேருக்கு கடந்த திங்கட்கிழமை (20) இரவு சமைத்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

முல்லை ஸ்கீம் நூரானிய்யா ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாகத்தினரிடம் குறித்த உணவு பொதிகளை கையளித்தனர்.






# மன்னாரில் சீரற்ற காலநிலை; மீன்பிடி நடவடிக்கை பாதிப்பு!

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நீடித்து வரும் பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக மீன்பிடி நடவடிக்கை பாதிப் படைந்துள்ளது.

இன்றைய தினம் வியாழக்கிழமை வீசி வரும் கடும் காற்று காரண மாக மீனவர்கள் மீன்பிடி நட வடிக்கைகளை தவிர்த்துள்ளனர். குறிப்பாக தாழ்வுபாடு, சௌத்பார், பேசாலை,பள்ளிமுனை ஆகிய கிராம மீனவர்கள் மீன்பிடி நடவ டிக்கையை தவிர்த்துள்ளனர்.

வீசி வரும் அதிக காற்றுக் காரணமாக கடல் அலைகளும் அதிகம் காணப்படுவ தால் மீனவர்கள் தங்கள் மீன்பிடி வள ளங்கள், வலைகள் உட்பட்ட உபகரணங் களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியுள்ளனர்.

அதே நேரம் காற்றின் வேகம் கார ணமாக கரையோர பகுதிகளில் அமைக் கப்பட்டிருக்கும் மீனவர் வாடிகளும் சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை மே 29 இல் காரைதீவில் நடக்கும்!

## அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சத்தியநாதன் ஏற்பாடு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் 'மக்கள் மேடை' நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது.

தூய்மையான அரசியலுக்காகச் செயற்படும் மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் இந்த நிகழ்வு காரைதீவு பாபா றோயல்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென மாவட்டத்தில் உள்ள அரசியல் பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள் ளனர். கிராம ரீதியாக மூவர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நாம் எமது வாக்குகளை அறிவு பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களை மாத்திரமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்ப வேண்டும். இதுவே எமது தலையான கடமையாகும் என்று மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இணைப்பாளர் சத்தியநாதன் தெரிவிக்கையில்,




எதிர்வரும் ஒக்ரோபர் 16 ஆம் திகதி சகல தேர்தல் அதிகாரங்களும் தேர்தல் ஆணையகத்திடம் செல்கின்றன.அதன் பின்பு நாடாளுமன்றமோ அல்லது ஜனாதிபதியோ தேர்தலில் தலையிடும் அதிகாரம் இருக்காது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் வைத்தே ஆக வேண்டும். எனவே மக்கள் விழிப்படைய வேண்டும்.

நிதியின்மை போன்ற காரணங்களை காட்டி உள்ளூராட்சி தேர்தல் பின் போடப்பட்டது. இருந்தபோதிலும் எதிர் வரும் ஒக்ரோபரில் தேர்தல் நடத்தியாக வேண்டும்.

மார்ச் 12 இயக்கத்தின் குறிக்கோளின் படி எட்டு தகுதிகள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வேட்பாளருக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த எட்டு தகுதிகளும் இருக்கின் றவர்களுக்கு தான் வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதிஅளிக்க வேண்டும். கட்சிகளும் அனுமதி அளிக்க வேண்டும்.

தரமான பிரதிநிதியைத் தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு இருக் கிறது. நாடாளுமன்ற தேர்தலில் எடுக் கும் முடிவு அடிப்படையில் நாட்டின் கிராமத்தின் மற்றும் உங்களது நகரத் தின் எதிர்காலமும் உங்களது பிள் ளைகளின் எதிர்காலமும் தங்கி உள் ளது. – என்றார்.



# கல்லடி வேலாயுதர் ஆலயத்தில் தீ மிதிப்பு!

(பழுவூரான்)

கல்லடி ஸ்ரீவேலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாளான இன்று வியாழக்கிழமை (23) பக்தி பூர்வமாக, அடியவர்களின் அரோகரா கோசங்களுக்கு மத்தியில் தீ மிதிப்பு இடம்பெற்றது.

இதன்போது ஆரம்பத்தில் முருகப் பெருமான் அழகு சப்புறத்தில் வெளி வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தார்.

இந்த நிலையில் இவ்வாலய உற்சவம் கடந்த வியாழக்கிழமை (16) வாஸ்து சாந்திக் கிரியைகளுடன் ஆரம்பமானமை குறிப் பிடத்தக்கது.





# உப்போடை விவேகானந்தா கல்லூரி மாணவி சாதனை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரியில் ஆறாம் ஆண்டில் பயிலும் மாணவி ஜெய கிருஷ்ணா ஜெயரக்ஷா இந்தியா சங்கமம் குளோபல் அகாடமி நிறுவனத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட, ஒன்பதாவது நித்தியாஞ்சலி சர்வதேச விழா இந்தோனேசியா பாலி பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற போது நாட்டிய விழாவில் பங்கு பற்றியமைக்காக சர்வதேச சிறப்பு சான்றிதழ்களும், வெற்றி கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்.

இவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (22) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி நவகீதா தர்மசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் முன்னிலையில் அவர் பாராட்டப்பட்டார்.

# புத்தளத்தில் சுகாதார நடவடிக்கைகளில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(கற்பிட்டி)

புத்தளம் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமைகளைத் தொடர்ந்து பல சுகாதார பிரச்சினைகளும் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இந்த விடயங்களில் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், புத்தளம் நகர சபை, ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை இணைந்து அறிவித்தல் விடுத்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

வயிற்றோட்டம், எலிக்காய்ச்சல் மற்றும் சிரங்கு போன்ற நோய்கள் ஏற்படலாம்.

காய்ச்சல், வயிற்றோட்டம், வயிற்று வலி போன்ற நோய்கள் காணப்பட்டால் உடனடியாக புத்தளம் தள வைத்திய சாலைக்கு செல்லும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்தோடு கீழ்வரும் சுகாதார பழக்க வழக்கங்களை கடைபிடிக்கும்படியும் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

முடியுமானவரை கொதித்தாறிய நீரையே அருந்துங்கள்.

எப்போதும் நன்கு சமைக்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளுங்கள்.

முடியுமானவரை வீடுகளில் தயாரித்த உணவுகளை உண்ணுங்கள்.

மலசல கூடத்துக்குச் சென்று வந்தால் சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவுங்கள்.

உணவுகளை உண்ணு முன்பும் பின்பும் சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவுங்கள்.

வெள்ள நீரால் கிணறுகள் பாதிப்படைந்து இருந்தால் சரியான முறையில் சுத்திகரிப்புச் செய்து குளோரின் இட்டு தொற்று நீக்கம் செய்து பாவியுங்கள்.

சிறுவர்கள் மற்றும் உடலில் காயங்கள் உள்ளவர்கள் கழிவு நீரில் இறங்குவதையோ விளையாடுவதையோ முடியுமானவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உடலில் காயங்கள் உள்ளவர்கள் குளங்களில் குளிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மலசல கூடங்களை குளோரின் இட்டு நன்கு தொற்று நீக்கம் செய்து கொள்ளுங்கள்.

டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் காணப்பட்டால் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துங்கள்.

# மன்னார் முருங்கன் பகுதியில் இன்றும் யானையின் நடமாட்டம் காணப்பட்டது!

## நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(மன்னார் )

மன்னார் முருங்கன் பகுதியில் இன்று வியாழக்கிழமை (23) காலை இரண்டாவது நாளாகவும் யானை நடமாட்டம் காணப்பட்டது.

இந்தப் பகுதியில் யானையின் நடமாட்டத்தைத் தடுக்க அரச அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வர வேண்டும் என அருட்தந்தை டெஸ்மன் அஞ்சலோ அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் முருங்கன் பகுதியில் இன்றைய தினம் வியாழக்கிழமை (23) காலை இரண்டாவது நாளாகவும் தனித்து யானை ஒன்று நடமாடி திரிந்தது. இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

நேற்றைய தினம் புதன்கிழமை (22) காலையும் யானை இந்தப் பிரதேசத்தில் நடமாடியது.

இந்த நிலையில் இன்று வியாழக்கிழமை (23) காலை மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் இரண்டாவது நாளாகவும் நடமாடி திரிந்துள்ளது. மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் யானையை காட்டுக்குள் துரத்தினர்.

அந்த யானையை உடனடியாக இந்தப் பகுதியில் இருந்து துரத்த அதிகாரிகள் உடன் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை தற்போது இந்த யானையால் ஏற்பட்டுள்ளது.



இவ்விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேசச் செயலாளரும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இது தொடர்பாக உடனடியாக மன்னார் மாவட்ட அரச அதிபருடன் தொடர்பு கொண்டு குறித்த சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தினோம்.

உடனடியாக தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் எதிர்வரும் வியாழக்கிழமை அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக தெரிவித்தார்.

மக்கள் யானையால் பீதி அடைந்துள்ளனர். தற்போது சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் தென்னை மரங்களை யானை சேதமாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மக்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அருட்தந்தை டெஸ்மன் அஞ்சலோ அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.



# வேளாண்மைத் துறையில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னணியில் உள்ளது: தமிழக அரசு

இந்தியாவிலேயே தமிழகம், வேளாண்மைத் துறையில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

“முதல்வர் மு.க.ஸ்டாலினின் சிர்மிகு திட்டங்களால் இந்தியாவிலேயே தமிழகம் வேளாண்மைத் துறையில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. விவசாயத்தைப் பெருக்கிட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிய முன்னாள் முதல்வர் கருணாநிதி விவசாயிகளுக்கான 7,000 கோடி ரூபா கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தார். விவசாய பம்ப்செட்களுக்கு இலவச மின்சாரம் முதலிய பல்வேறு சலுகைகளை வழங்கினார்.

அதேபோல், முதல்வர் மு.க.ஸ்டாலின், விவசாயத்துறை, வேளாண்மைத்துறை என அழைக்கப்பட்ட துறையின் பெயரை வேளாண்மை – உழவர் நலத்துறை என ஆட்சிப் பொறுப்பேற்ற 2021 ஆம் ஆண்டிலே அறிவித்து உழவர்களுக்காகப் பல சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இத்திட்டங்களால் வேளாண் உற்பத்தி பெருகியுள்ளது. உழவர்கள் வளம் பெறுகின்றனர். தமிழகம் உணவு உற்பத்தியில் முன்னேறியுள்ளது.

முதல்வர் ஸ்டாலினின் தொலைநோக்குத் திட்டமாக இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வேளாண் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது.

பயிர்க் காபீட்டுத் திட்டத்தில் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக 24 லட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு கடந்த மூன்றாண்டுகளில் 4,366 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் மழை, வறட்சி ஆகிய பேரிடர்களால் 12.88 லட்சம் ஏக்கர் நிலங்களில் பாதிக்கப்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு மொத்தம் 582 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டு 8 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மழை, வறட்சி ஆகியவற்றால் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் மொத்தம் 4,342 கோடி ரூபாய் வழங்கப்பட்டு 24 லட்சத்து 50 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கரும்பு விவசாய நிலப்பரப்பு 95 ஆயிரம் எக்டரிலிருந்து 1 லட்சத்து 54 ஆயிரம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் கரும்பு உற்பத்தி ஊக்கத் தொகை மற்றும் சிறப்பு ஊக்கத் தொகையாக 651 கோடி ரூபாய் 4 லட்சத்து 40 ஆயிரத்து 575 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 71 விவசாயிகளுக்கு கரும்பு அறுவடை இயந்திரங்கள் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகைக் கடனாக 600 கோடி ரூபாயை வழங்கியுள்ளது தமிழக அரசு.” – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடிக்கு கொலை மிரட்டல்!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மர்ம நபர் ஒருவரினால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சென்னையின் புரசைவாக்கத்தில் உள்ள என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு அலுவலகத்துக்கு தொலைபேசியில் பேசிய மர்ம நபர் இந்த கொலை மிரட்டலை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரசாரத்திற்காக வாகன பேரணியில் வரும் போது அவரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக அந்த மர்ம நபர் தொலைபேசி அழைப்பின் ஊடாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு: 12 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

தமிழகத்தை அண்மித்த வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் 12 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை அண்மித்த தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு புதிய காற்றழுத்ததாழ்வு பகுதி தற்போது உருவாகியுள்ளது. இது வடகிழக்கு திசையில் நகர்ந்து, நாளை காலை, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மத்திய வங்கக்கடல் பகுதிகளில் நிலவக் கூடும். பிறகு, மேலும்வலுப்பெற்று வடகிழக்கு திசையில் நகர்ந்து, வடகிழக்கு, வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் 25 ஆம் திகதி மாலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசானமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தெற்கு கேரளா மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல், ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இன்றும், நாளையும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 25 முதல் 28 ஆம் திகதி வரை ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இன்று தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், ராமநாதபுரம், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருப்பூர், கோவை, நீலகிரி மாவட்டங் களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.” என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை, கேரளாவின் பல பகுதிகளில் கனமழை நீடிப்பதால் பத்தனம்திட்டா, இடுக்கி மாவட்டங்களுக்கு இன்று கனமழைக்கான சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சில நாள்களாக கேரளாவின் பல பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்துள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு திருவனந்தபுரம் உள்ளிட்ட இடங்களில் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் பிரதான வீதிகளில் மழைநீர் தேங்கியது.

கனமழை மற்றும் மிக கனமழை பெய்யும் மாவட்டங்கள் குறித்த விவரங்களை இந்திய வானிலை ஆய்வு மையம் தினமும் அறிவித்து வருகிறது. இதனிடையே கேரளாவின் பல பகுதிகளில் கனமழை நீடிப்பதால் பத்தனம்திட்டா, இடுக்கி மாவட்டங்களுக்கு இன்று கனமழைக்கான ரெட் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# திரைப்பட நடிகர் ஷாருக்கான் வைத்தியசாலையில் அனுமதி

பிரபல நடிகர் ஷாருக்கான் அஹமதாபாத்தில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான போட்டியின் போதே அவர் ‘வெப்ப வாதத்தால்’ பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அவரது உடல்நிலை தற்போது சீராக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



# பிரித்தானியாவில் பொதுத் தேர்தல் ஜூலை 4 ஆம் திகதி நடத்தப்படும்

## பிரதமர் ரிஷி சுனக் அறிவிப்பு



பிரித்தானியாவில் எவரும் எதிர்பார்க்காத வகையில் பொதுத்தேர்தலுக்கான திகதியை அறிவித்து பிரதமர் ரிஷி சுனக் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளார்.

இதன்படி எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி வாக்கெடுப்புக்கான நாளாக அவர் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு வாக்கிற்காகவும் போராடவுள்ளதாக பிரதமர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

அவரது ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி 14 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த பின்னர் எதிர்க்கட்சியான தொழிற்கட்சியிடம் தோல்வியடையும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலுக்கான திகதி எப்போது அறிவிக்கப்படும் என்ற பல மாத ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த ரிஷி சுனக், புதன்கிழமை தனது டவுனிங் ஸ்ட்ரீட் அலுவலகத்திற்கு வெளியே நின்று, சிலர் எதிர்பார்த்ததை விட முன்னதாகவே தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டார்.

இது உரிய நேரத்திற்கு முன்னரே நடத்தப்படும் தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது



# வடக்கு காசாவில் இடம்பெற்ற மோதலில் இஸ்ரேல் படையினர் மூவர் உயிரிழப்பு

வடக்கு காசாவில் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

படை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை ஹமாஸ் அமைப்பினரின் சினைப்பர் தாக்குதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் மேலும் ஒருவர் கடும் காயங்களுக்குள்ளானார்.

அதேபோன்று, கட்டடமொன்றுக்குள் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி மற்றுமொரு படைவீரர் உயிரிழந்துள்ளார். இன்னுமொருவர் படுகாயமடைந்தார். பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 33, 22 மற்றும் 21 வயதுடைய இராணுவ வீரர்கள் என இஸ்ரேல் படை அறிவித்துள்ளது.

இந்த மூவரின் உயிரிழப்புடன் காசா பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் படை நடவடிக்கையில் தமது தரப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 286 ஆக அதிகரித்துள்ளதாக இஸ்ரேல் படை மேலும் தெரிவித்துள்ளது.

# குடியிருப்பு அனுமதி அட்டையை புதுப்பிக்குமாறு பிரான்ஸ் அறிவிப்பு



பிரான்ஸில் 10 ஆண்டுகள் செல்லுபடியாகும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் அவற்றை காலாவதி திகதிக்கு முன்னர் புதுப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் மூன்று வகையான நிரந்தரக் குடியிருப்பு அனுமதி அட்டைகள் வழங்கப்படுகின்றன.

இவை ஐரோப்பிய ஒன்றியத்தாரல்லாதவர்களுக்கு வழங்கப்படும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி அட்டைகளாகும்.

அத்துடன், இந்த அனுமதி அட்டைகள் வைத்திருப்போர், தொழில் புரிபவராக இருந்தாலும் தொழில் புரியாதவராக இருந்தாலும் பிரான்சில் வாழ்வதற்கு இந்த அட்டைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இருப்பினும், இந்த அட்டைகள் காலாவதியாவதற்கு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு முன் அவற்றை புதுப்பித்தல் அவசியமாகும்.

அவ்வாறு புதுப்பிக்கவில்லையென்றால், சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் 180 யூரோக்கள் அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, நிரந்தரக் குடியிருப்பு அனுமதி அட்டையானது காலாவதியாகும் கடைசி நிமிடம் வரை காத்திருக்காமல், முன்கூட்டியே புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

பக்கங்கள் 05

கனடா முரசு

வியாழக்கிழமை 23/05/2024

## யூத பாடசாலையில் சூடு; சந்தேகநபர் சிக்கினார்!

கியூபெக், மே 23

2023ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மொன்ரியல் நகரில் உள்ள ஒரு யூதப் பாடசாலையில் துப்பாக்கிப் பிரயோகம் C2




# உலகில் வாகனங்கள் திருட்டில் முதல் 10 நாடுகளில் கனடாவும்!

## இப்படிக் கூறுகின்றது இன்டர்போல்

**ஒன்ராரியோ, மே 23**

**வாகனத் திருட்டில் உலகின் முதல் 10 நாடுகளில் கனடாவும் உள்ளடங்குவதாக இன்டர்போல் தெரிவித்துள்ளது.**

**பெப்ரவரி மாதம் முதல் கனடாவில் 1,500க்கும் மேற்பட்ட திருடப்பட்ட வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என இன்டர்போல் சுட்டிக்காட்டியுள்ளது.**

பெப்ரவரி மாதம் முதல் உலகம் முழுவதும் ஒவ்வொரு வாரமும் 200க்கும் மேற்பட்ட திருடப்பட்ட கனடிய வாகனங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன என இன்டர்போல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருடப்பட்ட வாகனங்களுக்கான கனடாவின் தரவுத்தளத்தை இன்டர்போலுடன் ஒருங்கிணைக்க இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கனடிய தேசிய பொலிஸார் எடுத்த முடிவு காரணமாக இதுவரை 1,500க்கும் மேற்பட்ட திருடப்பட்ட கனடிய வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என இன்டர்போல் தெரிவித்துள்ளது.

# இரண்டு சிறுமியர் மீது பாலியல் பலாத்காரம் கனடியத் தமிழ் இளைஞர் மீது குற்றச்சாட்டு

ஒன்ராரியோ, மே 23

இரண்டு சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்தார் எனக் கனடியத் தமிழர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரட்ஃபோர்ட் வெஸ்ட் குவிலிம்பரி நகரை சேர்ந்த இருபது வயதான ஜனார்த்தன் சிவரஞ்சன் என்பவரே பாலியல் பலாத்கார குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

2023 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தொடர்ச்சியான பாலியல் பலாத்கார சம்பவங்கள் தொடர்பில் அவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

பாலியல் வன்கொடுமை, பாலியல் குறுக்கீடு மற்றும் பாலியல் தொடுதலுக்கான அழைப்பு போன்ற குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யோர்க் பொலிஸாரால் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

17 வயதுடைய கல்லூரி மாணவரைப் போல தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு 16 வயதான சிறுமியையும், 16 வயதானவராக அடையாளப்படுத்திக் கொண்டு 13 வயதான சிறுமியையும், அவர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரினால் மேலும் சிறுமிகள் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கும் பொலிஸார் சந்தேகநபரின் படத்தையும் வெளியிட்டுள்ளனர்.



# சைபர் ஊடுருவல்களைக் கட்டுப்படுத்த புதிய இணையப் பாதுகாப்பு உபாயம்!

## கனடிய மத்திய அரசு வெளியிட்டுள்ளது



ஒன்ராரியோ, மே 23

வளர்ந்து வரும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு எதிராக அதன் பரந்த அளவிலான கணினி அமைப்புகள் மற்றும் தகவல் வங்கிகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட புதிய இணையப் பாதுகாப்பு உபாயம் ஒன்றினை கனடிய மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

மே 22ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த மூலோபாயம், அண்மைய காலங்களில் இணைய பாதுகாப்பை மேம்படுத்துவதில் அரசாங்கம் முன்னேற்றம் அடைந்தாலும், இணைய ஆபத்துகள் இன்னும் வேகமாக முன்னேறியுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளது.

கனேடியர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான அரசாங்க சேவைகளை டிஜிட்டல் முறையில் வழங்குவதற்கு துறைகள் மற்றும் நிறுவனங்கள் முழுவதும் புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்புத் தேவை என்று இந்த மூலோபாயம் வலியுறுத்துகின்றது.

தனிப்பட்ட தகவல்கள், மதிப்புமிக்க ஆராய்ச்சித் தரவு மற்றும் பிற முக்கியப் பொருள்களை வைத்திருப்பதன் காரணமாக அரசாங்கம் கவர்ச்சிகரமான இலக்காக உள்ளது என்று இந்த மூலோபாயத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, முக்கியமான மற்றும் அத்தியாவசிய சேவைகளை சீர்குலைப்பதன் மூலமாகவோ அல்லது வகைப்படுத்தப்பட்ட அல்லது தனிப்பட்ட தகவல்களை அம்பலப்படுத்துவதன் மூலமாகவோ சைபர் தாக்குதல்கள் அரசாங்க நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அது கூறுகிறது.




## யூத பாடசாலையில்...

நடத்தியக் குற்றச்சாட்டில் 20 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடங்கிய சில வாரங்களின் பின்னர், மொன்ரியல் நகரின் யூத பாடசாலை ஒன்றில் துப்பாக்கிப் பிரயோகத் துளைகள் குறித்து பொலிஸார் கண்டறிந்தரன்.

சந்தேக நபர் லசால் பகுதியில் கைது செய்யப்பட்டு, துப்பாக்கி மற்றும் வாகன திருட்டு உள்ளிட்ட குற்றச்சாட்டில் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்துப்பட்டுள்ளார்.



# கனேடிய உறவுகளை மோதல் பகுதிகளிலிருந்து வெளியேற்றுவதில் அரசாங்கம் தவறிழைக்கிறது

## புதிய ஜனநாயகக் கட்சி குற்றம் சாட்டுகின்றது

ஒன்ராரியோ, மே 23

மோதல் பகுதிகளிலிருந்து கனேடியர்களின் உறவினர்களை வெளியேற்றுவதற்காக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக புதிய ஜனநாயகக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

சூடானில் இருந்து ஒருவர் கூட மீள்குடியேற்றப்படவில்லை எனவும், கனேடியர்கள் தங்கள் உறவினர்களை அவசர சூழ்நிலைகளில் இருந்து வெளியேற்றுவதற்கான திட்டங்களைத் தொடங்கி பலமாதங்களாகியும் காசாவிலிருந்து எவரேனும் குடியேற்றப்பட்டுள்ளார்களா என்பதும் சந்தேகமாக உள்ளது எனவும் புதிய ஜனநாயகக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

சூடானில் உள்நாட்டுப் போர் கடந்த வசந்த காலத்தில் ஆரம்பித்த போதிலும், கைரேகை தேவைகள் தாமதமாகி விட்டதால், இந்த ஆண்டு இறுதி வரை தங்கள் உறவினர்கள் கனடாவை அடைய மாட்டார்கள் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர் என அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

காசாவில் உள்ள குடும்பத்துடன் இருக்கும் கனடியர்கள், தங்கள் அன்புக்குரியவர்கள், விண்ணப்பச் செயல்பாட்டின் ஆரம்பத்தில் போர் சூழலிலிருந்து தப்பித்தால், திட்டத்திலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற எண்ணத்துடன் இருப்பதாகக் கூறுகின்றனர்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட புதிய ஜனநாயகக் கட்சியின் குடியேற்ற விமர்சகர் ஜென்னி குவான், ஆப்கானியர்களின் அவசரகால மீள்குடியேற்றத்தின் போது லிபரல் கட்சியினர் செய்த தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார்.



# வீட்டு நெருக்கடியில் கியூபெக் மாகாணம்!

## அமைச்சரே ஒப்புதல்


கியூபெக், மே 23

கியூபெக் மாகாணம் வீட்டு நெருக்கடியில் இருப்பதாக கியூபெக்கின் வீட்டுவசதி அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

சில வகையான வெளியேற்றங்களுக்கு மூன்று ஆண்டு தடை விதிக்கும் மற்றும் 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குறைந்த வருமானம் உள்ள வாடகைதாரர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்கும் சட்டமூலம் ஒன்றினை மாகாண அவையிலே மே 22ஆம் திகதி பிரான்ஸ்-எலைன் டுரான்செவ் சமர்ப்பித்தார்.

பிரான்ஸ்-எலைன் டுரான்செவ்வின் இந்த முன்மொழியப்பட்ட சட்டமானது, வீட்டுப் பிரிவைப் பிரிப்பதற்கும், பெரிதாக்குவதற்கும் அல்லது மாற்றுவதற்கும் என்ற பெயரில் வாடகைதாரர்களை வெளியேற்றுவதைத் தடுக்கும்.

‘ஒரு நெருக்கடியான சூழலில், ஒருவரின் வீட்டை இழப்பது வீடற்ற நிலைக்கு வழிவகுக்கும் மகத்தான விளைவுகளை ஏற்படுத்தும், எனவே நாம் அதைத் தவிர்க்க வேண்டும்’ என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




# கோர கத்திக் குத்து தாக்குதல் மொன்றியலில் மூவர் மரணம்!

கனடாவின் மொன்றியாலில் இடம்பெற்ற கத்தி கத்து தாக்குதல் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மொன்றியாலின் பிலாட்டியு மொன்ட்றோயல் போரோவ் (Montreal's Plateau-Mont-Royal borough) பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ராச்செல் மற்றும் செயின்ட் அன்ட்ரே வீதிகளுக்கு இடையில் குறைந்தபட்சம் பதினைந்து பேர் மோதிக் கொண்டனர் என 911 என்ற பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிற்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

15, 23 மற்றும் 25 வயதான நபர்கள் சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்த மோதலுடன் தொடர்புடையவர்களே சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# பாலியல் துஷ்பிரயோகக் குற்றம் சுமத்தப்பட்ட இராணுவ ஜெனரல் அரசின் மீது எதிர் வழக்கு!

ஒன்ராரியோ, மே 23

2021 ஆம் ஆண்டில் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு முன்னாள் இராணுவத் தலைவர், அரசியல் காரணங்களுக்காக தீங்கிழைக்கும் வகையில் தம் மீது வழக்குத் தொடரப்பட்டதாகக் கூறி, மத்திய அரசு, ஆயுதப் படைகள் மற்றும் தம் மீது குற்றம் சாட்டியவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார்.

நட்டஈடு மற்றும் பொது மன்னிப்பு கோரி ஃபெடரல் நீதிமன்றத்தில் லெப்டினன்ட்-ஜெனரல் ஸ்டீவன் வீலன் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

'அலுவலக துஷ்பிரயோகம், அலட்சிய விசாரணை, தீங்கிழைக்கும் வழக்கு மற்றும் ஊடக கசிவுகளில் அவரது நற்பெயரையும் தொழிலையும் அழித்ததற்காக' இராணுவமும் பாதுகாப்புத் துறையும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இந்த வழக்கில் பாதுகாப்புத் தலைவர் ஜெனரல் வெய்ன் ஐர் மற்றும் துணைத் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் உட்பட பிரதிவாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.






# கனடியத் தமிழர் பேரவை முன்னெடுத்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

ஒன்ராரியோ, மே 23

பதினைந்து ஆண்டுகள் கடந்தும், தமிழர்கள் இன்னும் நீதிக்காக காத்திருக்கின்றனர் எனவும், இன்னும் அடக்குமுறையை தாங்கிக் கொண்டிருக்கின்றனர் எனவும் கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுத்த கனடியத் தமிழர் பேரவை அது தொடர்பான அறிக்கையிலேயே மேற்படி விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

இதுதொடர்பில் கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

'மே 18, 2024 அன்று, கனடியத் தமிழர் பேரவை 15ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலை மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளை அனுஷ்டித்தது. எண்ணற்ற தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டு, பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட, சர்வதேச சமூகம் மௌனமாக இருந்த கொடூரமான வரலாற்றை இந்த நெஞ்சைப் பிளக்கும் நிகழ்வு அப்பட்டமாக நினைவூட்டுகிறது. 15 ஆண்டுகள் கடந்தும், நீதி கிடைக்கவில்லை.

உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், சக்திவாய்ந்த மௌனத்துடன் நிகழ்வு தொடங்கியது. இலங்கையில் திட்டமிட்ட தமிழ் இனப்படுகொலையை சித்திரிக்கும் ஓர் அழுத்தமான காணொலி காட்சிப்படுத்தப்பட்டது. கடந்தகால அட்டூழியங்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் பகுதிகளில் எஞ்சியிருக்கும் தமிழர்களின் தொடர்ச்சியான போராட்டங்களை அது அம்பலப்படுத்துகிறது. இதைத் தொடர்ந்து இந்த உயிர் பிழைத்தவர்களுக்கு ஆதரவளிக்க கனடியத் தமிழர் பேரவையின் இடைவிடாத முயற்சிகள் பற்றிய கண்ணோட்டம்.

கனடியத் தமிழர் பேரவையின் துணைத் தலைவர் டாக்டர் ஷான் சண்முகவடிவேல் அவர்கள் உருக்கமான உரையை நிகழ்த்தினார். தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய அடக்குமுறைகளில் சர்வதேச அமைப்புகள் தலையிட்டு நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். கண்ணியமான வாழ்க்கையை கட்டியெழுப்ப நிதி உதவி தேவைப்படும் உயிர் பிழைத்த குடும்பங்களுக்கு தமிழ் சமூகம் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நினைவேந்தல் மலரஞ்சலியுடன் அங்கிருந்த அனைவரையும் ஆழமாக எதிரொலிக்கும் ஒரு உணர்ச்சிமிக்க பாடலுடன் நிகழ்வு தொடர்ந்தது.

நினைவூட்டலின் இரண்டாம் பாதியானது, இன்னும் கடுமையான அநீதிகளைச் சகித்துக் கொண்டு, இக்கட்டான சூழ்நிலையில் வாழும் உயிர் பிழைத்த குடும்பங்களை ஆதரிப்பதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியது.' – என்று உள்ளது.













